நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 01.02.2021

**சாத்தூர் நகர்மன்ற அவசரக் கூட்டம்**

**நிகழும் மங்களகரமான ஆண்டு சார்வரி வருடம் தை மாதம் 19 ஆம் நாள் 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசரக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்: 1

Finance (SFC –MC) Department G.O (MS) No.368 Dated: 07.10.2020 அரசு ஆணையில் அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் (Basic Amenities) மேற்கொள்ள 2020–2021–ம் ஆண்டுக்கு மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் நகராட்சி பகுதியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு அதற்கான திட்டக்கருத்துருவினை மாவட்ட ஆட்சியர் வழியாக சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி சாத்தூர் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை எடுத்துச் செய்ய உரிய திட்டக்கருத்துருவினை மன்றத்தின் ஒப்புதல் பெற்று மாவட்ட ஆட்சியர் வழியாக கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| SI. No | Name of work | Estimate amount (Rs.In Lakhs) |
|---|---|---|
| 1 | Construction of Pump Room, Operator Room, Providing Paver block arrangments, Supply & Delivery of 25 HP Pump set arrangment at Bye pass road OHT Premises in Sattur Municipality. | Rs.25,00,000/- |
| 2 | Providing DI Pipe, 30 HP Pump set with necessary special arrangment in existing sump at Ward No.8 Headworks in Sattur Municipality. | Rs.25,00,000/- |
| 3 | Construction of compound wall with Gate arrangments at municipal burial ground in Sattur Municipality | Rs.50,00,000/- |
| | **Total** | Rs.100,00,000/- |

(ந.க.எண். 97/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 733, நாள்: 01.02.2021.**
**தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்: 2

அருப்புக்கோட்டை சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக ரூ.444.71 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழக அரசு அரசாணை (நிலை) எண் 147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (குவ2) நாள்:13.11.2019ன்படி நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாக அனுமதி தொகை ரூ.444.71 கோடி நிதியல் 20 % தொகை ரூ.88.942 கோடி IUDM திட்டத்திலிருந்து மான்யமாகவும் (ரூ.44.00 கோடி நிதி IUDM 2020–2021 திட்டத்திலும், ரூ.44.942 கோடி நிதி IUDM 2021–2022 திட்டத்திலும்) ஒதுக்கீடு செய்தும், எஞ்சிய 80% தொகை ரூ.355.768 கோடி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்திலிருந்து (HUDCO) குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியித்தின் (WSPF) கீழ் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை மையத்தின் (TNUIFSL) வழியாக கடனாகப் பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட அதற்கான நிதி ஆதாரத்திற்கு அரசாணை நிலை எண். 109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (குவ2) நாள்: 06.10.2020–ல் கடன் தொகையினை பெறுவதற்கான நிபந்தனைகள் விதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையில் உறுப்பினர் மற்றும் செயலாளர் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் அவர்களின் கடிதத்தின்படி WSPF/ACWSS/HUDCO/2019/11 நாள்: 13.03.2020 கடன் தொகை ரூ.355.21 கோடி என இறுதி செய்து HUDCO நிறுவனத்திடம் இருந்து பெற ஆணையிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) தனது கடித எண். WSPF/ACWSS/Loan to ULBs/2019/16 நாள்: 11.01.2021 கடிதத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் (HUDCO) மூலம் கடன் உதவிப் பெறும் வகையில் சாத்தூர் நகராட்சிக்கான திட்ட மதிப்பீடு தொகையான ரூ.54.77 கோடியில் கடன் தொகையான ரூ.43.82 கோடி பெற்றுக் கொள்ள அனுமதித்து அதற்கான நிபந்தனைகள் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் (Terms And Condtions) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி கடன் தொகையை சாத்தூர் நகராட்சி, குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடம் (WSPF) இருந்து புதிய கூட்டு குடிநீர் திட்ட செயலாகத்திற்கு கடன் உதவி பெற கடன் ஒப்பந்தம் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி ஆணையர் அவர்கள் கையொப்பமிடவும் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் மற்றும் ஒப்புதல் அளிக்கலாம்.

2. புதிய கூட்டுக் குடிநீர் திட்ட செயலாகத்திற்கு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடம் (WSPF) இருந்து சாத்தூர் நகராட்சி ரூ.43.82 கோடி கடன் உதவி பெறுவதற்கு தேவையான கடன் ஒப்பந்தம் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி சார்பாக நகராட்சி ஆணையர் கையொப்பமிடவும் மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் WSPF கடிதம் எண். WSPF/ACWSS/Loan to ULBs/2019/16 நாள்: 11.01.2021–ல் குறிப்பிட்டுள்ளபடி விதி முறைகள் மற்றும் வரையறைகளை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 785/2017/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 734, நாள்: 01.02.2021.**
**தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 3</u>

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மரியன் ஊரணியில் KFW–திட்டடத்தின்கீழ் மேம்பாட்டு பணிகளை ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.32 நாள்: 05.04.2017–ல் நிர்வாக அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி திட்டப்பணியை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் அதற்கான மானியம் ரூ.98.00 இலட்சம் (70 சதவீதம்), கடனாக ரூ.28.00 இலட்சமும் (20 சதவீதம்) நகராட்சி பங்கு தொகையான ரூ.14.00 இலட்சமும் (10 சதவீதம்) செலுத்தி பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.49, நாள்:02.05.2017ல் மன்றத்தின் அனுமதி பெற்று பணிக்கான கடன் தொகையினை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. சில நிர்வாக காரணங்களால் பணியினை மேற்கொள்வதற்கு காலதாமதம் ஏற்பட்டது. தற்போது கடன்

தொகை பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் பிப்ரவரி மாதத்துடன் முடிவடைவதால் கூடுதல் அவகாசம் 30.06.2021 வரைக்கும் ஒப்பந்தத்தினை புதுப்பிக்கவும் கடன் ஒப்பந்தம் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி ஆணையர் அவர்கள் கையொப்பமிடவும் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திட்டத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் தொகையினை பெறவதற்கும் அதற்கான கால அவகாசத்தினை 30.06.2021 வரை நீடித்து கொள்ளவும் கடன் ஒப்பந்தம் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி ஆணையர் அவர்கள் கையொப்பமிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1424/2015/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 735, நாள்: 01.02.2021.**
**தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்: 4

அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 02.09.2020ம் தேதிய அரசாணையில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை இரண்டு மாத காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்களுக்கு வாடகைத் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்களித்து வரப்பெற்ற அரசாணை நகல் நகர்மன்ற கூட்டத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட விபரப்படி கடைகள் மற்றும் வரியில்லா இனங்களுக்கு தொகை ரூ.11,66,598/—ஐ வஜா செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடைகள் மற்றும் மொத்த இனங்கள் குத்தகை இனங்கள் | ஏப்ரல்—2020 | மே—2020 | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குத்தகை இனங்கள் 8 இனங்கள் | 202725 | 202725 | 405450 |
| 2 | கடைகள் மொத்தம் 87 எண்ணம் | 380574 | 380574 | 761148 |
| | மொத்தம் | 583299 | 583299 | 1166598 |

(ந.க.எண். 1064/2017/சி2)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 736, நாள்: 01.02.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**(ஒம்) என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**